செ.வெ.எண்: 346 நாள்:11.06.2019

**தமிழக அரசின் திட்டங்களை பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சி.**

---

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சி இன்று (11.06.2019) விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களால் தமிழக மக்கள் நலனுக்காக எண்ணற்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய திட்டங்களை பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், விளாப்பட்டியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடத்தப்பட்டது. இதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் குறித்தும், மாண்புமி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்ட வளர்ச்சிக்காக செயல்படுத்தி வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் குறித்து இப்புகைப்படக்கண்காட்சி இடம்பெற்றிருந்தது.

மேலும் வேளாண்மைத்துறை, மருத்துவத்துறை, பள்ளிக்கல்வித்துறை, சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், கால்நடை பராமரிப்புத்துறை, வருவாய்த்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தோட்டக்கலைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும், அவற்றை பெறுவதற்கான வழிமுறை குறித்து அமைக்கப்பட்டிருந்த இப்புகைப்படக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்த்து பயனடைந்தனர்.

---------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**